# சர்வவியாபி

MISSION PRESS 1840

SARVAVIABI

| | | | | |
|---|---|---|---|---|
| 09-07-2017 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | ஹேவிளம்பி வருடம் ஆனி 25 | வருட சந்தா ₹150<br>தனிப்பிரதி ₹ 6 |

| | | | | |
|---|---|---|---|---|
| புத்தகம் 111<br>பக்கம் - 12 | இதழ் 26 | e-mail:missionpress48@gmail.com<br>e-mail:missionpress48@yahoo.com | Ph: 0413/ 2334360 | ஆசிரியர்: அருள்தந்தை C. அந்தோனி ரோச் |


## இயேசுவோடு உள்ள உறவுக்கு முதலிடம் கொடுக்க திருத்தந்தை அழைப்பு



**பொது** நிலையினரோ, அர்ப்பண வாழ்வு வாழ்பவரோ, ஆயரோ, அருள்பணியாளரோ, யாராக இருந்தாலும், அனைவரும், எல்லாவற்றுக்கும் மேலாக, இயேசுவோடு உள்ள உறவுக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென, இஞ்ஞாயிறன்று கேட்டுக் கொண்டார். திருத்தந்தை பிரான்சிஸ்.

இஞ்ஞாயிறு நற்செய்தி வாசகத்தை (மத்.10:37-42) மையப்படுத்தி, நண்பகல் மூவேளை செப உரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தங்கள் வாழ்வில் இயேசுவுக்கு முதலிடம் கொடுத்தால், அது முழுமையானதாக இல்லாமல் இருந்தாலும்கூட, உலகில் கிறிஸ்து போன்று வாழ்வதற்கு உதவும் என்று கூறினார். கிறிஸ்தவ மறைபோதகச் சீடத்துவத்தின் இன்றியமையாதப் பண்புகள் பற்றிய சிந்தனைகளை எடுத்துரைத்த திருத்தந்தை, இயேசுவைச் சந்திக்கிறாயா? இயேசுவிடம் செபிக்கின்றாயா? போன்ற கேள்விகளை, ஒவ்வொரு கிறிஸ்தவரிடமும் முதலில் கேட்க வேண்டும் எனக் கூறினார்.

இயேசுவுக்காக ஒருவர் எல்லாவற்றையும் துறந்தார் என்றால், அவரில் மக்கள், ஆண்டவரைக் கண்டுகொள்வார்கள் என்றும், ஒவ்வொரு நாளும் அவர் தன்னைப் புதுப்பித்து, சோதனைகளை வெற்றி காண இது உதவும் என்றும், திருத்தந்தை கூறினார். வாழ்வுமுழுவதும் இயேசுவைக் கொண்டிருக்கவும், இரண்டுகாலணிகளில் ஒரே காலை வைக்கும், ஏமாற்று இதயத்தைக் கொண்டிருக்க வேண்டாமெனவும், தாங்கள் புனித அருள்பணியாளர்களாக வாழ்வதற்கு, இறைமக்கள் சமுதாயம் உதவ வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார் திருத்தந்தை. எல்லாவற்றுக்கும் மேலாக இயேசுவை அன்பு கூர்வதற்கு அன்னை மரியிடமிருந்து கற்றுக் கொள்வோம் எனவும் கூறினார். மேலும், ஜூலை 5, வருகிற புதனன்று சுதந்திர தினத்தைச் சிறப்பிக்கும் வெனிசுவேலா நாட்டில், அமைதியும் ஒப்புரவும் ஏற்படுவதற்கு, ஞாயிறு மூவேளை செப உரையின் இறுதியில் அழைப்பு விடுத்தார்.

வெனிசுவேலா மக்களுடன், செபம் நிறைந்த தனது ஒருமைப்பாட்டுணர்வையும் தெரிவித்த திருத்தந்தை, அந்நாட்டுப் பாதுகாவலரான Coromto அன்னையின் புரிந்துரையைக் கேட்பதாகவும், தெருக்களில் தங்களின் பிள்ளைகளை இழந்த குடும்பங்களுடன், ஆன்மீக முறையில் தான் மிக நெருக்கமாகக இருப்பதாகவும் உறுதியளித்தார். தென் அமெரிக்க நாடான வெனிசுவேலாவில் தொடர்ந்து நிலவும் பதட்ட நிலைகளால், இதுவரை, ஏறக்குறைய நூறுபேர் கொல்லப்பட்டுள்ளனர். ●

## நமது பாசமிகு பேராயர் மேதகு அந்தோணி ஆனந்தராயர் D.D.,D.C.L. அவர்களுக்கு வாழ்த்து!



**ந**மது பாசமிகு பேராயர் மேதகு **அந்தோணி ஆனந்தராயர்** D.D.,D.C.L. ஆண்டகை அவர்கள், புதுவை-கடலூர் உயர் மறைமாவட்ட பேராயராகப் பொறுப்பேற்று, 5-7-2017ம் நாளுடன் 13 ஆண்டுகள் நிறைவு பெறுகின்றன. மேதகு பேராயர் அவர்கள் வழியாக இறைவன் நமது உயர் மறைமாவட்டத்திற்கு அருளிய அனைத்து நன்மைகளுக்கும் நன்றி கூறி, பேராயர் அவர்களின் அனைத்து நலன்களுக்காகவும், கருத்துக்களுக்காகவும் செபிக்கின்றோம். **- சர்வவியாபி.**



**விசுவாசக்கோட்பாட்டுப் பேராயத்திற்கு புதிய தலைவர்:** விசுவாசக்கோட்பாட்டுப் பேராயத் தலைவராக ஐந்தாண்டுகள் பணியாற்றிய கர்தினால் Gerhard Ludwig Muller அவர்களுக்கு நன்றி தெரிவித்துள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அப்பேராயத்தின் புதிய தலைவராக, இயேசு சபை பேராயர், Luis Francisco Ladaria Ferrer அவர்களை, இச்சனிக்கிழமையன்று நியமித்துள்ளார். பேராயர் அவர்கள், 2008ம் ஆண்டிலிருந்து விசுவாசக் கோட்பாட்டுப் பேராயத்தின் செயலராகப் பணியாற்றி வருகிறார். இஸ்பெயின் நாட்டின் Majorca தீவில், Manacor என்ற ஊரில், 1944ம் ஆண்டில் பிறந்த பேராயர், Luis Ladaria அவர்கள், 1966ம் ஆண்டில் இயேசு சபையில் சேர்ந்து, 1973ம் ஆண்டில் அருள்பணியாளராகத் திருநிலைப்படுத்தப்பட்டார். உரோம் கிரகோரியன் பாப்பிறை பல்கலைக்கழகத்தில், 1975ம் ஆண்டில், இறையியலில் முனைவர் பட்டமும் இவர் பெற்றுள்ளார். கிரகோரியன் பாப்பிறை பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகவும், பணியாற்றிவரும் இவர், ஆயர்கள் பேராய ஆலோசகர் குழுவிலும், கிறிஸ்தவ ஒன்றிப்பு அவை ஆலோசனைக் குழுவிலும், புனித பத்தாம் பயஸ் குழுவோடு உரையாடல் நடத்தும் திருப்பீடக் குழுவிலும் உறுப்பினராக உள்ளார். ●

ஆசிரியர் பேனா...

# சரக்கு-சேவை வரிவிதிப்பு (ஜிஎஸ்டி) நடைமுறைக்கு வந்தது

**பல ஆண்டுகளாக பேசப்பட்டு வந்த** ஜி எஸ் டி - சரக்கு - சேவை வரி விதிப்பு முறை, கடந்த 30-7-2017 நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வந்தது. சுதந்திர இந்தியாவின் மிகப்பெரிய பொருளாதார சீர்திருத்த நடவடிக்கையாக இது கருதப் படுகிறது. இதன் மூலம் கடந்த70ஆண்டுகால வரிவிதிப்பு கொள்கை முடிவுக்கு வந்துள்ளது; 30 க்கும் மேற்பட்ட வரி விதிப்புமுறைகள் கைவிடப்பட்டு, நாடு முழுதும் ஒரே சீரான வரி விதிப்பு முறை வழக்கத்துக்கு வருகிறது. இதனால் உலக அரங்கில் இந்தியபொருளாதார வலிமையும், கடன்களை குறைக்கும் திறனும் அதிகரிக்கும்; கருப்புப் பணமும், தீவிரவாதிகளுக்குச் செல்லும் பணமும் அறவே ஒழிக்கப்படும் என நிபுணர்கள் கூறுகின்றனர். விலைவாசி குறையும், நாட்டின் உற்பத்தித் திறன் அதிகரிக்கும், வேலை வாய்ப்புகள் அதிகரிக்கும் என்ற நம்பிக்கை பிறந்துள்ளது. அரசும், அதிகாரிகளும், பொதுமக்களும் ஜிஎஸ்டி யின் பயன்களை நடைமுறைப்படுத்தவும் அனுபவிக்கவும் தயார் நிலையில் உள்ளனர்.

**ஜிஎஸ்டி வரி விதிப்பில்** சில பொருட்கள் மற்றும் சேவை வரிகள் உயர வாய்ப்பு இருப்பினும், வரி ஏய்ப்பு, கருப்புப் பணம் முழுமையாகக் கட்டுப்படுத்தப்படும்; அத்தியாவசியப் பொருள்கள் (பால், தயிர், உள்ளிட்டவை) விலை கணிசமாகக் குறையும் என்பது சொல்லப்படுகிறது. மாநிலத்துக்கு மாநிலம் சரக்குகளுக்கும் சேவைகளுக்கும் விதிக்கப்பட்ட வேறுபட்ட வரிவிதிப்பு முறைகளும், மதிப்புக்கூட்டு வரி, மத்திய வரி, மாநில வரி, உபரி வரி போன்றவை மாற்றி அமைக்கப்பட்டு ஒரே மாதிரியான வரிவிதிப்பு தொடங்கப்படுகிறது. 30 ஆண்டுகளுக்குமுன் 1986 லும், பின் 2000-ஆம் ஆண்டிலும் ஜிஎஸ்டி பற்றி கருத்துகள் எழுந்தபோது எதிர்ப்புகள் கிளம்பியதாலும் சாமானியர்களும், சிறுதொழில்களும் அதிகம் பாதிக்கப்படலாம் என கருதியதாலும் முந்திய அரசுகளில் இந்த நடவடிக்கை கைவிடப்பட்டது. காங்கிரஸ் ஆட்சியில் ஜிஎஸ்டிக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்த பாஜக, ஆட்சிக்கு வந்து, இப்போது ஜிஎஸ்டியை நடைமுறைப் படுத்தியுள்ளது. தேர்தலின்போது, அயல் நாடுகளில் முதலீடு செய்யப்பட்டுள்ள கருப்புப் பணத்தை மீட்டு ஒவ்வொரு இந்தியனின் கணக்கிலும் ரூ.15 இலட்சம் செலுத்துவதாக வாக்குத்தந்த இவர்கள் இன்னும் அந்த கருப்புப் பணம் மீட்டதாகத் தெரியவில்லை. உள்நாட்டு கருப்புப்பண புழக்கத்தையும், தீவிரவாதிகளுக்கு பணம் போவதையும் தடுக்க ரூ. 500, ரூ.1000 செல்லாது என அறிவித்து பொருளாதார சீர்திருத்த நடவடிக்கையில் இறங்கினார்கள். அதிகமாக பாதிக்கப்பட்டது சாமானியர்களும், அடித்தட்டு மக்களும், நடுத்தட்டு மக்களுமே. இப்பொழுது ஜிஎஸ்டி வந்திருக்கிறது. இதிலாவது பயன்கள் மிகுதியாகக் கிடைக்கும் என்று மக்கள் எதிர்பார்ப்பது நியாயமே.

**பல மாதங்களாக ஜிஎஸ்டி பற்றி** பேசப்பட்டு வந்தது, முப்பதுக்கும் அதிகமான தொடர்பு அமர்வுகள் வரிவிதிப்பு துறையினரால் பல நிலைகளில் அனைத்து மாநிலங்களிலும் நிகழ்த்தப்பட்டது. ஜிஎஸ்டி எளிமையானது, சாமானியர்களைப் பாதிக்காது, சிறிது நாட்கள் சங்கடங்கள் இருந்தாலும், எதிர்காலத்தில் மிகுந்த பயன்தரக்கூடியது என்றெல்லாம் பேசப்பட்டது. தற்போது ஜிஎஸ்டி 5%, 12%, 18%, 28% என்று நான்கு வகையாக விதிக்கப்பட்டுள்ளது. ஜிஎஸ்டியை வரவேற்க இந்திய நாடாளுமன்ற மைய மண்டபத்தில் 30-6-2017 நள்ளிரவில் மாபெரும் விழா நடத்தப்பட்டது. ஒரே நாடு, ஒரே வரி (one nation, one Tax), புதிய இந்தியா (New India) என்ற வார்த்தைகள் புதிய பொருளாதார எழுச்சி தொடங்கி யுள்ளதை அறிவித்தன.

**ஆஸ்திரேலியா, அமெரிக்கா, சீனா** போன்ற வளர்ந்த நாடுகளில்கூட இல்லாத அளவுக்கு அதிகபட்சமாக 28% வரியும் விதிக்கப்பட்டுள்ளது. பணம் செல்லாது என்று அறிவிக்கப்பட்ட பின் இடம் பெற்ற பொருளாதார தாக்கங்களிலிருந்து இன்னும் பொதுமக்கள் மீளாத சூழலில், ஜிஎஸ்டி அமலாக்கம் இடம் பெற்றுள்ளது. நீண்ட நாள் பலன் தரும் என்று கருதினாலும் தொடக்க சங்கடங்களினால் அலைக்கழிக்கப்படும் சிறுதொழில் முனைவோர், சாமானியர் களுக்கு வழிகாட்டல் இன்னும் அதிகம் தேவை. தொடக்க இழப்புகளை ஏற்றே ஆக வேண்டும், நாட்டின் நலன் கருதி அதை மக்கள் தாங்கிக் கொள்வார்கள் என்று தொடக்க கல்வி ஆசிரியர்கள் போல அதிகாரத்தில் உள்ளவர்கள் சொல்வது வியப்பளிக்கிறது.

**வரி விதிப்பைப் பற்றி** முழுமையாக புரிந்துகொள்ளாதவர் களும், வியாபாரிகளும், சிறுதொழில் முனைவோரும், பொது மக்களும் கடும் நஷ்டத்தையும் சங்கடங்களையும் சந்திக் கின்றனர். பல தொழிலகங்கள், வணிக மையங்கள் தங்களது தின கணக்கிற்கு தேவையான மென்பொருள் கிடைக்காமல் அவதியுறுகின்றனர். (GST may not make a hole in your pocket, but it may tighten your purse) ஜிஎஸ்டியால் அதிக நஷ்டம் ஏற்பட வாய்ப்பில்லை, ஆயினும் செலவினங் களை குறைத்துக் கொள்ள வேண்டிய சூழல் வரும் என செய்தி தாட்கள் கணிக்கின்றன. நீண்ட நாள் நடைமுறையில் நாட்டுக்குப் பயன்தரும், தனி மனிதருக்கும் பயன்தரும் என்று சொல்வது, அன்றாட கூலியை எதிர்பார்த்திருக்கும் சாமானியர் களின் உண்மை நிலையையும் மன அழுத்தத்தையும் எவரும் எடைபோட்டுப் பார்க்க இயலாது; தேவையற்றது என்று தள்ளிவிடவும் முடியாது. நீண்ட நாள் பயனுக்காக இன்றைய அத்தியாவசிய தேவையை தள்ளி வைக்க முடியாது. வரிவிதிப்பு, வரி வசூல், வரி செலுத்துதல், வரி பயன்பாடு அனைத்துக்கும் இன்னும் திட்டமிடலும் எளிமைப்படுத்தலும் தேவை. சிறிது தொடக்க நிலை சங்கடங்கள் இன்று புரிகின்றன; ஆனால் நீண்ட நாள் பயன்பாடு என்பது எவருக்கும் இன்னும் புரியவில்லை. இருப்பினும், சரக்கு - சேவை வரி நடைமுறைப் படுத்தப் பட்டுள்ளது. ●

---

✦ **உலகிலிருந்து பசியை முற்றிலுமாக ஒழிக்க வேண்டுமெனில்...** உலகிலிருந்து பசியையும் சத்துண வின்மையையும் அகற்றும் முயற்சிகளுக்கும் திருஅவை எப்போதும் தன் முழு ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்குவதாக, FAO எனப்படும் உலக உணவு மற்றும் வேளாண் நிறுவனத்தின் 40வது பொதுஅவைக்கு அனுப்பியுள்ள செய்தியில் கூறியுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ். FAO நிறுவன தலைமையகக் கூட்டத்தில் திருப்பீடச் செயலர், கர்தினால் பியேத்ரோ பரோலின் வழியாக தன் செய்தியை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஒவ்வொருவருக்கும் தினசரி உணவை வழங்கிவிட்டால் மட்டும் போதாது. மாறாக, உணவைப் பெறுவதற்கு அவர்களுக்கிருக் கும் உரிமை மதிக்கப்பட்டு, ஒருமைப்பாட்டை வளர்க்க உதவவேண்டும் என தெரிவித்துள்ளார். உலகிலிருந்து பசியை முற்றிலுமாக ஒழிக்க வேண்டுமெனில், உதவி தேவைப்படும் மக்களுக்கு செயலாக்கமுடைய உதவியை வழங்கும் அனைத்துலக சமூகத்தின் கடமை ஏற்றுக்கொள்ளப்பட்டு, செயல்படுத்தப்படவேண்டும் எனவும், திருத்தந்தையின் செய்தியில் கூறப்பட்டுள்ளது. - வத்திக்கான் வானொலி.




ஆண்டின் பொதுக்காலம் 15 ஆம் ஞாயிறு (16-07-2017) எசா.55:10-11 உரோமை.8:18-23 மத்.13: 1-23

# நல்ல நிலத்தில் விழுந்து நிறைபலன் தருவோம்!

அருள்திரு. D. அலெக்சாண்டர்,
உதவி பங்குதந்தை, இறையூர்.

**வா**யிலிருந்து வெளிவரும் வார்த்தைகள் எவ்வித குறிக்கோளும் இன்றி உதிர்க்கப்படுவது இல்லை. ஒவ்வொரு வார்த்தையும் ஒரு நோக்கத்திற்காக பேசப்படுகிறது. கடவுளின் வார்த்தை அதிலும் சிறப்பாக பலன் தந்துதான் நிறைவு பெறும். வார்த்தைகள் விதைகளைப்போல வீசப்பட்டு அவை கேட்போர் உள்ளத்தில் முளைத்துப் பலன் தரவேண்டும்.

இன்றைய நற்செய்தியும் முதல் வாசகமும் மிகுந்த நெருங்கிய தொடர்பு உடையனவாக அமைந்திருக்கின்றன. நற்செய்தியில் விதைப்பவர் கடவுள்என்பது தெளிவாக விளக்கப்படுகிறது. நாம் நல்ல நிலங்களாக இருந்து நிறைபலன் தரவேண்டும் என்பதும் இறையாட்சிக்கு உட்பட வேண்டும் என்பதும்தான் இன்றைய வாசகங்கள் உணர்த்தும் உண்மை ஆகும்.

**கடவுளின் வார்த்தையும் வலிமையும்:** எசாயா இறைவாக்கினரின் சொற்படி ஆண்டவரின் வாயிலிருந்து வரும் வார்த்தைகளும் இருக்கும். அதாவது வானின்று இறங்கிவரும் மழையும் பனியும் நிலத்தை நனைத்து விதைப்பவனுக்கு விதையும் உண்பவனுக்கு உணவையும் கொடுக்கின்றன. பலன் நிச்சயமாக கிடைக்கும். அவ்வாறே கடவுளின் வார்த்தையும் வல்லமை உடையதாக அமைகிறது. கடவுளின் வார்த்தை வெறும் வெற்று சப்தம் கிடையாது. மாறாக அது செயலாற்றும் வார்த்தை. ஆண்டவரின் வார்த்தை நிச்சயமாக செயல் வடிவம் பெற்று நிறைவடையும். அத்தகைய வல்லிமையுள்ள கடவுளின் வார்த்தையே மனுவுரு எடுத்து மனிதனை மீட்க இவ்வுலகில் மீட்பராக பிறந்தார்.

**இறைவார்த்தையும் நிறைபலனும்:** கடவுளின் வார்த்தை அடங்கிய திருவிவிலியம் முழுவதுமே ஒரு வல்லமையின் பிரசன்னம் என்பதை நாம் அறிய வேண்டும். திருவிவிலியத்தில் இருக்கின்ற வார்த்தைகள் எல்லாம் கடவுளால் நமக்கு அருளப் பட்டவை என்பதை எப்போதும் நாம் நினைவில் கொள்ளுதல் அவசியமாகும். ஏனெனில் அவை வெறும் பேசப்பட்ட வார்த்தைகள் அல்ல. மாறாக அவை செயலாற்றும் வார்த்தைகள், உருவாக்கும் வார்த்தைகள், உயிருள்ள வார்த்தைகள், வல்லமையின் வார்த்தைகள், பலன்தரும் வார்த்தைகள் என்பதுதான் மறுக்க முடியாத உண்மை.

இயேசுதான் உண்மையாக மனுவுரு எடுத்த கடவுளின் வார்த்தையாக இருக்கிறார். அப்படியெனில் அந்த இயேசுவின் வாயினின்று உதிர்க்கப்பட்ட வார்த்தைகள் அனைத்துமே உயிருள்ள வார்த்தைகளாக நம் உள்ளத்தில் விழுந்து விதை களாக முளைக்கின்றன. ஆக விளைச்சல் நன்றாக அமைய வேண்டுமெனில் நம் உள்ளம் எனும் நிலம் நன்றாக இருக்க வேண்டும்.

***பாறை மீதா? வழியோரமா? முட்புதரிலா?:*** கடவுளின் நற்செய்தி எல்லாருக்கும் கொடுக்கப்படுகிறது. இயேசுவே அவர் வாழ்ந்த போது தன் சீடர்களுக்கு நற்செய்தியை போதித்தார். ஆனாலும் அந்த 12 சீடர்களிலேயே எல்லாருடைய மனதும் ஒரு நல்ல நிலம் போன்று செயல்படவே இல்லை. சீடர்களின் மனநிலையிலேயே பல மாற்றங்கள், வேறுபாடுகள் அமைந் திருந்தன. இயேசுவை சூழ்ந்து இருந்த மக்களே அவரை எள்ளி நகைக்கும் அளவுக்கு சீடர்களின் பலவீனம் இருந்தது. இருப்பினும் அவர்களில் விதைக்கப்பட்ட இறைவார்த்தை மெல்ல மெல்ல முளைத்து நன்றாக வளர்ந்து அவர்களை உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை அறிவிக்கும் தூதுவர்களாக மாற்றியது. அதுவே இறைவார்த்தையின் வலிமை. அவர்கள் பெற்றுக்கொண்ட நற்செய்தியை பிறருக்கு கொடுக்காமல் அவர்களால் இருக்க முடியவில்லை. ஒரு கடுகுவிதை முளைத்து மரமாகி வானத்து பறவைகள் தங்குமளவுக்கு மரமாகிறது. சிறிது புளிப்பு மாவு பொதியப்படும் போது மாவு முழுவதும் புளிப்பு ஏறுகிறது. அதுபோலவே சீடர்களின் உள்ளத்தில் இயேசு விதைத்த வார்த்தைகள் கொஞ்சம் கொஞ்சமாக தழைத்து இவ்வுலகம் முழுவதும் இன்று பலன் தந்து கொண்டிருக்கிறது. நாமும் இயேசுவின் வார்த்தைகளை பல்வேறு நிலைகளில் கேட்கிறோம். நம்முடைய பலன் என்ன என்பதை சிந்திக்க வேண்டும். நூறு மடங்கா? அறுபது மடங்கா? அல்லது முப்பது மடங்கா? என்பதை சிந்திப்போம்.

**உவமைகளின நோக்கம்:** இந்த 'விதைப்பவர் உவமை' யின் நோக்கம் என்ன? கேட்க செவியுள்ளோர் கேட்கட்டும் என்று இயேசு உவமையை முடிக்கிறார் எனில், அவர்கள் மந்த புத்தி கொண்ட வர்களாகவோ, அல்லது முட்டாள்களாகவோ இருந்தார் கள் என்பது அல்ல. மாறாக இறைவார்த்தையை கேட்டால் அதற்கேற்றபடி தங்கள் வாழ்வை மாற்றிக் கொள்ள வேண்டும். ஆனால் அவர்கள் அவ்வாறு தங்களையே மாற்றிக்கொள்ள முன்வராத கடின உள்ளத்தினராக இருந்தார்கள். கடின உள்ளம் அவர்களிடம் இருந்த காரணத்தால் தான் இயேசு கேட்க செவியுள்ளோர் கேட்கட்டும் என்று கூறுகிறார்.

அதாவது இறைவார்த்தை, நற்செய்தி அனைவருக்கும் கொடுக்கப்படுகிறது. அதை கேட்டு அதன்படி வாழ தங்களையே மாற்றிக் கொண்டு நல்வழியில் வாழ்வோரே நிறைபலன் தருபவர்கள் ஆவார்கள். அவர்களின் வாழ்வு நூறுமடங்கு, அறுபது மடங்கு, முப்பது மடங்கு பலன் என்று செழிக்கிறது. இறை வார்த்தைக்குஏற்ப தங்களை மாற்றிக் கொள்ளாதவர்கள் பாறைமீதும், வழியோரமும், முட்புதரிலும் விழுந்த விதைகளாக பலனின்றி போவார்கள்.

***நாம் எத்தகைய நிலம்?:*** இறைவார்த்தையை நாளும் கேட்கிறோம், அதைபற்றி பேசுகிறோம்.அந்த இறைவார்த்தையால் நம் வாழ்வில் ஏற்படும் மாற்றம் என்ன. இறைவனுக்கு நெருக்கமாகவும், பிறரன்பில் சிறப்புடனும் இருக்க வேண்டும். அப்போது இறையாட்சிக்கு உட்பட்டு நிறைமகிழ்ச்சி பெற முடியும்.



## மிஷன் அச்சகத்தில் கிடைக்கும் நூல்கள்

**✶ வணக்கமாதம் - நூல்கள்**

| | | |
|---|---|---|
| 1) | சேசுநாதருடைய திரு இருதய வணக்கமாதம் | - ரூ. 100/- |
| 2) | ஜெபமாலை அன்னை வணக்கமாதம் | - ரூ. 100/- |
| 3) | கன்னிமரியாளின் வணக்கமாதம். | - ரூ. 100/- |
| 4) | உத்தரிக்கிற ஆன்மாக்களின் வணக்கமாதம் | - ரூ. 100/- |

**✶ Bro.அ.மெ.ஜேம்ஸ்** எழுதி வெளியிட்ட

| | |
|---|---|
| 1) மனிதரில் அற்புத அந்தோணியார். | - ரூ. 60/- |
| 2) மனிதரில் பூத்த நறுமலர்கள் (புனித ஆசீர்வாதப்பர், புனித ஸ்கொலாஸ்திகா) | - ரூ. 65/- |
| 3) மனிதரில் அற்புத குழந்தை இயேசுவின் தெரேசம்மாள். | - ரூ. 95/- |
| 4) அன்னை மரியாளைப் புகழ்வோம். | - ரூ. 20/- |

**✶ அருட்பணி இ. இயேசு அந்தோனி** எழுதி வெளியிட்ட

| | |
|---|---|
| 1) அன்னை மரியாள் நாம் அறிந்ததும் அறியாததும். | - ரூ. 120/- |
| 2) எது சிலை வழிபாடு? | - ரூ. 150/- |

**✶ செபமும், திருப்பாடல்களும்.** - ரூ. 70/-

**✶ "ஞான சமுத்திரம்" செப புத்தகம் அச்சில் உள்ளது.**
**(உரிமம் மிஷன் அச்சகத்திற்கே)**

**✶ "ஓர் ஆன்மாவின் வரலாறு" புத்தகம் அச்சில் உள்ளது.**
**(உரிமம் மிஷன் அச்சகத்திற்கே)**

கிடைக்குமிடம்: **மிஷன் அச்சகம்,**
196, கத்தீட்ரல் வீதி, புதுச்சேரி - 605 001. (தபால் செலவு தனி.)



# நசரேத்தூர் மரியா (24)

Sr.M.லில்லி மரி ME,
புதுச்சேரி.

ஒருவருடைய புகழ் பரவும்போது எதிரிகள் தோன்றுவது இயல்பு. இந்த எதிரிகள் முதலில் தங்கள் நாவை ஆயுதமாக்கி இல்லாததையும் பொல்லாததையும் சொல்வார்கள். அப்படித்தான் பரிசேயர்கள் அவருக்கு எதிராக எழுந்தார்கள். என்ன வதந்தி சொல்லியிருக்க முடியும்? ஓய்வு நாளைக் கடைப்பிடிக்க வேண்டாம் என்று சொன்னார். பரிசேயர்களுடைய குற்றங்களைச் சுட்டிக்காட்டினார். இப்படி நாற்சந்துகளிலும் கடைவீதிகளிலும் கிணற்றடியிலும் மக்கள் கிசுகிசுக்க ஆரம்பிக்கிறார்கள். நசரேத்தூரில் இயேசுவைப்பற்றிய கருத்துக்கள் பிளவு பட்டவைகளாக இருக்கின்றன. சிலர் அவர்தான் மெசியா. அவரைப்போல் யாரும் பேசியதில்லை, செய்ததுமில்லை. இன்னும் சிலர் ஏன் இவர் தன் ஊரைவிட்டு வெளியில் சென்றார்? என்கின்றனர். வேறு சிலர் இயேசுவைத் தங்களுக்கு மட்டுமே வைத்துக்கொள்ள விரும்பினர். மற்றும் சிலர் இவர் தன்னை இறைவாக்கினராகச் சொல்லிக்கொள்கிறாரே! இவர் யார் என்று நமக்குத் தெரியாதா? நம்ம ஊர் சூசை தச்சனின் மகன்தானே. அவர் தன் தந்தையின் தொழிலைத் தொடர்ந்து செய்ய வேண்டியதுதானே. இன்னும் சிலர் அவர் புத்தி தடுமாற்றம் அடைந்துள்ளார். அதாவது அவருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது.

அவர் தன் கிராமத்துக்கு வருகிறார். ஆனால் அந்த ஊரைச் சேராதவரைப்போலத் தன் சீடரோடு சென்றுவிடுகிறார். சில பெண்கள் கூட அவருக்குப் பணிவிடை செய்ய அவர் பின்னால் செல்கிறார்கள். எந்த ரபிக்கும் பெண் சீடர்கள் கிடையாது. இவர் மட்டும் ஏன் வித்தியாசமாகச் செய்கிறார்? இப்படி வதந்திகள் பல.

**தன் கிராமத்துக்கு இரண்டாவது வருகை:** இவ்வருகை பிரச்சினையாக மாறுகிறது. பலர் அவரைப்பற்றிச் சந்தேகம் கொள்கின்றனர். இன்னும் சிலர் நூதனப் பிரியத்தோடு "இங்கு ஏதாவது புதுமை செய்வாரா? பார்ப்போம் என்றனர். அதற்கு அவர் கூறியது " இந்தத் தீய விபச்சார தலைமுறையினர் அடையாளம் கேட்கின்றனர்". (மத் 12:39)

அவர்களுக்கு "நம்பிக்கை இல்லாததால் அவர் அங்கு பல வல்லச் செயல்களைச் செய்யவில்லை." (மத் 13:58) தொழுகைக் கூடத்தில் முணுமுணுப்பு தொடர்கிறது. ஆனால் இயேசு அவர்களுக்குச் சொன்னர் "தம் சொந்த ஊரிலும் வீட்டிலும் தவிர மற்றெங்கும் இறைவாக்கினர் மதிப்புப் பெறுவர்". (மத் 13:57)



**இருமுறை தப்பிக்கிறார்:** இயேசுவுக்கு எதிராக கிளர்ச்சியும், பகைவர்களும் எழும்பியபோது அவரை அழைத்துவந்து அவர் புத்தி சுவாதீனத்தோடு செயல்படச் செய்ய வேண்டும் என்று உறவினர்கள் நினைத்தார்கள். எனவே மரியாவையும் கூட்டிக்கொண்டு இயேசுவை அழைத்துவர புறப்பட்டார்கள். மரியாவிடம் ஒருவேளை உம் மகனுக்குப் பேய் பிடித்திருக்கலாம் அல்லது சித்த பிரமை கொண்டிருக்கலாம் என்று சொல்லி அவரை அழைத்துச் செல்லலாம் என்று எண்ணினர். மரியா தூதர் தனக்கு அறிவித்தபடி தாவீதின் அரியணையில் அவர் இருக்கவேண்டுமே! இங்கு என்ன செய்கிறார்? அவர் எதிர்ப்பின் அடையாளமாக இருப்பார் என்று சிமியோன் சொன்னாரே! அதுதான் நிறைவேறுகிறதோ! இவ்வாறு சிந்தித்த வண்ணம் முப்பது கிலோ மீட்டர் நடந்து கப்பர்நாமுக்குச் செல்கிறார்.

இராயப்பர் வீட்டைச் சுற்றி ஒரு கூட்டம், ஏராளமான நோயாளிகளை அழைத்து வருகிறார்கள். வீட்டிற்குள் நுழையவே வழியில்லை. இயேசுவின் அருகில் செல்ல வேண்டும்: "அதோ உம் தாயும் சகோதரர்களும் சகோதரிகளும் வெளியே நின்றுகொண்டு உம்மைத் தேடுகிறார்கள்" என்று அவரிடம் சொன்னார்கள். (மாற்கு 3:82)

இயேசு பெரும்பாலும் தன் பதிலைக் கேள்வியாகவே தருவார். "என் தாயும் என் சகோதரர்களும் யார்? என்று கேட்டுத் தம்மைச் சூழ்ந்து அமர்ந்திருந்தவர்களைச் சுற்றிலும் பார்த்து "இதோ என் தாயும் என் சகோதரர்களும் இவர்களே. கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே என் சகோதரரும் சகோதரியும் தாயும் ஆவர்" என்றார். (மாற்கு 3:35)

மரியாவைச் சுற்றி நின்றவர்கள் அவரைப் பார்த்து "அம்மா இதோ பாருங்கள் உங்களையே உம் மகனுக்கு அடையாளம் தெரியவில்லை. யார் என் தாய்? என்று கேட்கிறார். ஆனால் மரியாவோ தன் மகனின் கேள்வியிலும் அவர் கொடுத்த விளக்கத்திலும் உள்ள ஆழ்ந்த அர்த்தத்தைப் புரிந்துகொணடார்.

இயேசு கொடுத்த பதில் சாதாரண ஒரு விளக்கம் அல்ல. ஆழ்ந்த சமுதாய உறவுகளின் மாற்றம். இன்று பொதுத் தொண்டில் ஈடுபட்டுள்ள ஒரு துறவியோ, குருவோ, ஆயரோ, அமைச்சரோ தங்கள் இரத்த உறவின் அடிப்படையில் உதவி செய்வதை இயேசுவின் இந்தக் கேள்வி சிந்திக்க அழைக்கிறது. கடவுளின் விருப்பத்தை நிறைவு செய்பவர்களுக்கு இருக்கும் இரத்த உறவு நம் சமுதாய உறவுக்குத் தடையாக இருக்கக் கூடாது. இந்த விதத்தில் இயேசு மனுக்குலம் முழுவதையும் ஒரே குடும்பமாகப் பார்க்கிறார். மரியா இயேசுவைப் பார்க்காமலே திரும்பிவிட்டார். இயேசுவோ தப்பிவிட்டார். (உறவினரின் கட்டாயத்திலிருந்து தப்பிவிட்டார்)

ஆனாலும் இயேசு சொன்ன நிபந்தனையில் மரியா தாய்க்குரிய இடத்தை உறுதியாகப் பற்றிக்கொண்டிருந்தார். ஏனென்றால் வானதூதர் மங்கள வாழ்த்து சொன்னபோது "இதோ ஆண்டவரின் அடிமை. உம்முடைய வார்த்தையின்படியே எனக்கு ஆகட்டும்" என்று தன்னை இறைச்சித்தத்திற்குக் கையளித்திருந்தார். தொடரும்

---

**அன்னைக்குக் கரம் குவிப்போம்-20**

(முற்கால தற்காலச் செபங்கள்-தமிழாக்கம் ச.லில்லி மரி) 09-07-2017



## St. Francis of Sales

மிகுந்த வல்லமையும் மிகுந்த நன்மைத்தனமும் உள்ள மரியே!

மிக இனிமையான கன்னி மரியே! நீர் எனது தாய். நான் உம்முடைய பிள்ளை என்னும் எண்ணம் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. நீர் வல்லமையுள்ளவர். நான் பலவீனன். மிக இனிய அன்னையே! என் செயல்களில் எல்லாம் என்னை வழிநடத்த உம்மைக் கெஞ்சிக் கேட்கிறேன். முடியாது என்று மட்டும் சொல்லாதீர். உமது மகன் மண்ணிலும் விண்ணிலும் உமக்கு எல்லா வல்லமையும் கொடுத்துள்ளார். இதைச் செய்ய என்னால் முடியாது என்று சொல்லாதீர். நீர் ஏழைகளாகிய எங்கள் அனைவருக்கும் தாயாக இருக்கிறீர். குறிப்பாக எனக்குத் தாயாக இருக்கிறீர். மிகச் சாந்தமான கன்னியே! நீர் என் தாய். எவ்வளவோ வல்லமையுள்ளவர். என் துயரத்தை நீக்க உன் உதவியைத் தாரும். என் தாயே என்னைப் பாரும். என் வேண்டுதல்களை எல்லாம் கேளும். உம் மகனின் மகிமைக்காக என்னை உம் குழந்தையாக ஏற்றுக்கொள்ளும். என் உடல், ஆன்மா, சார்ந்த தீமைகள் அனைத்திலிருந்தும் என்னை விடுவிக்க உமது புண்ணியங்களில் இருந்து குறிப்பாகத் தாழ்ச்சியிலிருந்து எனக்குப் பங்கு தாரும். ஆமென்.

---

**இவ்வாரத்தின் இறைவார்த்தை**



"பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லோரும் என்னிடம் வாருங்கள்" (மத் 11:28)



# ஆவியின் புரட்சியே மறுமலர்ச்சி

– சுவாமி ஆ. லூயிஸ்.

“சர்வவியாபி” வளர்க! நூறு ஆண்டுகட்கு மேலாக தமிழர் உலகை வலம் வரும் வியாபி கடவுளின் தொடர் பிரசன்னத்தின் சாட்சியாகும். புதுவை-கடலூர் முதன்மை மறைமாவட்டத் திற்கும் நெஞ்சம் நிறைபாராட்டுகளைப் பகிர்ந்து கொண்டு, வியாபியை வாசிக்கும் ஒவ்வொருவரும் ஒரு புதிய சந்தாதாரரை வியாபி வழி அறிமுகப்படுத்துவோம். வியாபியை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அதிகமாக அறிமுகப்படுத்து வோம். இதுவே ஒவ்வொருவருக்குள்ளும் உறைந்திருக்கும் தூய ஆவியின் தொடர் புரட்சியாகட்டும்.

இந்தியக் கிறிஸ்தவ வாழ்வின் விசுவாசப் பகிர்வைத் தொடர்ந்து பகிர்ந்து வருவதில் அனைவரும் பெருமை கொள்வோம், பகிர்ந்து கொள்வோம். பல்வேறு தலைப்புகளில் பகிர்ந்து வரும் நமக்கு இப்போது “**ஆவியின் புரட்சியே மறுமலர்ச்சி**” என்ற தலைப்பில் பொதுவான, அடிப்படையான சில அனுபவ மெய்மைகளைப் பகிர்ந்து கொள்ள முன்வருவோம். இத்தலைப்பின் கீழ் தகவல்கள், உண்மைகள், அனுபவங்கள் என பல கட்டுரைகள் இடம் பெற வாய்ப்புண்டு. ஆர்வத்தோடும் தாகத்தோடும் தூய ஆவியை இதயத்திலும் இல்லத்திலும் நாம் தேடிச் செல்வோம்.

***தூய ஆவி:*** மூவொரு இறைவன் ஆவியானவர், ஒருவர் தான். அந்த ஒரே ஆவியையும் இன்று பலர் பிரித்து, பெருக்கி ஒருமையை பன்மையாக்கும் பாங்கினை கவனத்தில் கொள்வோம். ஆவி ஒருவர் தான்,வரங்களோ பலவகையாகும். வரங்கள் ஆவியார் தரும் கொடைகள்தான். ஆவியையும் தூய ஆவி, தீய ஆவி, சுயநல ஆவி, என்று பகுத்து புரிந்து கொண்டு தூய ஆவியில் இயங்குவதை தேர்ந்து தெளிவு பெற்று புரிந்து விசுவசிப்போம்.

மெய்மையை உணர்வது இன்பம் என்பதை நமது ஆன்மாவில் அன்றாடம் உணர்வோம். இந்நிலையை இறை வனில் உணர்வதே பேரின்பம் என ஏற்போம். மெய்மையின் உணர்வே ஆவியின் வெளிப்பாடு. கடவுள் தந்தை “இருப்பவர்”; இருப்பதை “உணர்பவர்” இயேசு. இதன் பயனாக “வெளிப் படுபவர்” தூய ஆவி. “படைப்பு - மீட்பு - புனிதம்” என்பவை ஆவியின் ஒருங்கிணைந்த தொடர் செயல்பாடாகும். ஆவியின் பெயரைப் பயன்படுத்தி ஆதாயத்தைத் தேடும் சோதனையில் இருந்து நம்மை சுதந்திரமாகப் பாதுகாத்துக் கொள்வோம்.

***புரட்சி:*** “பணியோம், பணிவோம்” என்று இரு துருவங்களாக மனித வரலாறு இன்றும் பதிவாகி வருகிறது. தனக்குள் இருந்தும், ஒரு குழுவினுக்குள் இருந்தும் வெளிப்படும் சொற்கள், செயல்கள் அனைத்தும் வெளிப்பாடுகளான புரட்சி களாகும். உணர்ச்சியின் வெள்ளத்தில் இருந்து வெளிப் படுவதும் புரட்சி. சிந்தனை அலைகளில் இருந்து மோதுவதும் புரட்சி. ஆவியின் ஆழத்தில் இருந்து வெளிப்படுவதும் புரட்சி. புரட்சிகளை யாரும் தீர்மானிக்க இயலாது ஏனெனில் ஒவ்வொரு வருடைய வாழ்வும், குழுவின் வாழ்வும் பரந்த விரிந்த மறை பொருளாகும். உணர்ச்சிவசப்பட்டு இரத்தம் சிந்தும், கருத்து வயப்பட்டு முடிவுகள் அனைவர் மீதும் பொழியும். ஆனால் தூய ஆவி மலரைப் போல் மலர்ந்து மணம் பரப்பும்.

புரட்சியின் அடிவேர்களை நாடிச் செல்வோம். அறிவாற்ற லோடும் நம்பிக்கையோடும் உணர்வுப்பூர்வமாக புரட்சியின் நன்மைத்தனத்தை நமதாக்கிக் கொள்வோம். அ) படைப்பு முழுவதிலும், சிறப்பாக அவரது சாயலாக படைக்கப்படும் மனிதரிலும் இறைவனுடைய பிரசன்னம் தவறாது தங்கி உள்ளது. படைக்கின்றவரின் ஆற்றல் இன்றி எதுவும் யாரும் இல்லை. இத்தகைய உள் இருப்பே புரட்சிக்கு அடித்தளம். “இருக்கின்றவர் நாமே” உன்னோடு இருக்கின்றார் என்பதே மெய்மையாகும். இத்தகைய இறை இருப்பின் பிரசன்னத்தை யாரும் மறுக்க முடியாது. (INVOLUTION) ஆ) இவ்வாறு இருக்கும் இறைப் பிரசன்னம் ஆற்றல் மிக்கதாகும், உயிர் துடிப்புமிக்க தாகும். இருப்பின் பிரசன்னம் இயக்கமுடைதாகும். இத்தகைய இயக்கத்தின் விளைவாக ஒவ்வொருவரிலும் ஒவ்வொன்றிலும் ஆற்றல் நிரப்பி எழுச்சி பெறவும், இயங்கவும் உதவுகின்றது. படைப்பின் பல்வேறு இயக்கத்தையும் பரிணாமத்தையும் நம்மால் எளிதில் முழுமையாக உணரமுடிவதில்லை. (INVOLU-TION) இ) ஒவ்வொன்றிலும் இருப்பதும், இயங்கி எழுவதும் வெளிப்படுகின்ற போது அதுவே புரட்சியாகிறது, வெளிப் பாடாகிறது. இப்புரட்சி ஒருங்கிணைந்த புரட்சியாக இருக்க இடமுண்டு அல்லது நிறை குறைகள் உள்ளதாகவும் வெளிப் பட வாய்ப்புண்டு. (REVOLUTION) இறை ஆவியின் புரட்சியே மேன்மையானது, புனிதமானது, எப்போதும் எல்லார்க்கும் தேவையானது. இதையே மனித இனம் நாடினால் நல்லது நடக்கும்.

***மறுமலர்ச்சி:*** மலர்வதெல்லாம் புதுப்படைப்பாகும். இறைமணம் பரவுவது எல்லாம் மறுமலர்ச்சியாகும். “உன்னை இன்றி உன்னை உருவாக்கியவர், உன்னை இன்றி உன்னை மீட்க இயலாது” என்பதின் கொடைத் தன்மையையும், ஒருவரது பொறுப்புணர்வை இவண் ஆழ்ந்து சிந்தித்து செயல்பட்டு பொருள்மிகு புனித வாழ்வை நமக்குச் சொந்தமாக்கிக் கொள்வோம். தனது அன்புப் பிள்ளைகளை நிரந்தரமான பெற்றோர்களான இறைவன் என்றும் கைவிடமாட்டார். மறுமலர்ச்சியை நாளும் நம் வாழ்வில் உணர்ந்து உயர்வோம்.

அ) மறுமலர்ச்சியின் முதல் இதழ்தான் இறைவனின் தொடர்படைப்பாகும். பெயர் வடிவத்தை வழங்கி நமக்குள் இருந்து நம்மை ஒவ்வொரு நொடிப் பொழுதும் புதுப்பித்து புதுப்படைப்பாக விளங்க நம்முடன் பயணிக்கின்றார். இத்தகைய உணர்வுடன் வாழ்கின்றவர்கள் மறுமலர்ச்சியில் மகிழ்பவர்கள் ஆவர்.

ஆ) தனி ஒருவர், குழு, மனித இனம் என்ற மூவொரு நிலை யில் நாம் புண்பட்டவர்கள் என்பதால், கடவுள் தனது மகன் வழியாக சுவைக்க எப்போதும் அருள் பொழிந்து கொண்டு வருவதை உணர்பவர்களும் மறுமலர்ச்சியாளர்களே!

இ) துவக்க நிலையில் இருந்த புனித நிலை பாவத்தினால் மாசுபட்டதால் தூய ஆவியார் படைப்பையும், மனிதத்தையும் புனிதமாக்க உள்உறையும் ஆற்றலாக என்றும் இருக்கிறார். இதை உணர்ந்து ஆவியில் இயங்குகின்றவர்கள் புதுப்படைப் பாக புனிதத் தன்மையோடு வாழ்கின்றவர்களை நாம் மறுமலர்ச்சியாளர்கள் என்று இனம் புரிந்துகொள்கின்றோம்.

***வாழும் வரை போராடு:*** இயேசுவின் மூவித சோதனைகள் மனித குலத்தின் மூவித சோதனைகளாகும். சொத்து, சுகம், அதிகாரம் என்ற மூன்று அலகைகள் ஆண்டவரை வசப்படுத்த முயன்றன. இருப்பினும் இயேசு அவைகளை வென்று வெற்றி வீரராக வாழ்ந்தது போல நாமும் வாழ அழைக்கப் படுகின்றோம். எனவேதான் வாழும் வரை நாம் போராடி சோதனைகளை மேற்கொண்டு, விடுதலை வாழ்வை நமது வாரிசுகளுக்கு வழங்குவோம்.

பிரச்சனை இல்லை, எல்லாம் இயல்பாக இருக்கின்றது என்று வாழ்கின்றவர்கள் இறந்துகொண்டு இருக்கின்றனர். போராடுகின்றவர்கள் வாழ முயல்கின்றனர். வாழ்வை முழுமை யாக சந்திக்க மனமில்லாதவர்கள் சுயநலச் சிறையில் சொகுசுடன் வாழ்வதாக நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள். “எல்லாரும் நலமுடன் வாழவே, எல்லாரும் வளமுடன் வளர்கவே,எல்லாரும் நன்மையில் சிறக்கவே, தீமைகள் தீண்டாது விலகவே” என்று கடவுளின் ஒவ்வொரு குழந்தையும் நலமோடு வாழும்வரை நாம் எல்லாரும் போராடுவோம். தொல்லைகள் வேண்டாம் என்று விலகிச் செல்லாது வாழ்வை நாம் துணிவுடன், பணிவுடன், கனிவுடன் சந்திப்போம். அவர் நம்மோடு இருக்கும்போது நமக்கென்ன கவலை? விழித்தெழு வோம் பயணத்தை ஆவியின் போராட்டமாகத் தொடர்வோம். ●


***BRIDEGROOM WANTED***

For Pondichery based Roman Catholic, MBBS Girl Aged 25, wheatish Complexion now doing MD in CMC Vellore . Suitable Doctor Groom wanted.

**Contact: (0413) 2344534 / 97860 82643**



# உலக மீட்பர் காப்பியம்

பேராசிரியர், முனைவர். ***ச.சாமிமுத்து,*** திருச்சி.



## 17ஆம் படலம்

யாவே கடவுள் ஏவிய நான்காவது ஈ வாதையால் எகிப்து நாடே பாழ்பட்டது; இவ்வாதை பார்வோனையும் எகிப்திய தெய்வங்களையும் தலைகுனிய வைத்தது. இது, கடவுள் மக்களாகிய இசுரயேலரை மீட்பதற்குரியஅடையாளமாயிற்று. இவ்வாதையினின்று தானும் நாடும் விடுபடமோசே, ஆரோனுக்குரிய ஆண்டவரின் தலையீட்டால்தான் இயலுமென்னும் முடிவுக்குப் பார்வோன் இரண்டாம் இராம்சேசு வந்தான்!

**10 ஈக்களால் எகிப்து நாடே பாழாகிவிட்டது என்பதால் வாதைசெய்த ஈக்கள் சாதாரணமானவையாக இருக்க முடியாது, கொடிய நச்சுத் தன்மையுடை யவையாகத்தாம் இருக்கும். அவ்வாறான ஈக்கள் எகிப்தில் ஆங்காங்கு வாழ்ந்தன. இறைவனின் அருஞ் செயலால் அவை ஏராளமாய்த் திரண்டு வாதை விளைவித்தன.**

பசுக்களைப் பற்றிக் கடித்த ஈக்களால்
பசுக்களோ தொழுவில் கத்திக் கதறின!
கொசுக்களின் வாதை தொலைந்ததன் பின்னால்
தோட்ட வேலைகள் செய்த உழவர்கள்,
திசுக்களில் இசிவு ஏற்படக் கடித்துக்
குருதியை உறிஞ்சிய பருத்த ஈக்களால்
கெசுமுசு வென்று மூச்சதும் வாங்கி,
கிறுகிறுப் புற்று வரப்பதில் சரிந்தனர்

(திசுக்களில் - உயிரணுக்களில், Tissue; பருத்த ஈக்களால் - குருதியை உறிஞ்சிக் குடிக்கும் உடல் உறுப்புகள் கொண்ட ஈக்களால் (The blood sucking gadfly or dogfly) இவ்வகை ஈக்கள் உயிரினங்களின் பார்வையை மங்க வைக்கும். கெசுமுசுவென்று - மூச்சு இரைத்து, மூச்சு வாங்கி (பேச்சு வழக்கில் உள்ள சொல்); கிறுகிறுப்புற்று - மயக்கமுற்றுத்தலை சுற்றுதல்)

**11 இறைவன் அருளியுள்ள கொடைகளுள் தாய்மைப் பண்பு என்பது மனிதருக்கு மட்டும் அல்ல, விலங்குகளுக்கும் அருளப்பட்டுள்ளது. இப்பண்பைக் கோழிகள் அவற்றின் குஞ்சுகளை அரவணைத்துப் பாதுகாப்பதிலும் நாம் கண்டு வியக்கின்றோம்.**

கோழியின் குஞ்சுகள் ஈக்களின் வாதையால்,
குழந்தைகள் தாயின் இருகர அணைப்பிலும்
ஏழிசை ஈர்ப்பினின் இன்பப் பிடியுளும்
இருப்பவை போலுமே, கெக்கெக் கென்பதில்
நாழிகை பலவும் கழிந்திடக் கோழியின்
நற்சிற கணைப்பினுள் பதுங்கியே இருப்பதும்
வாழிபல் ஊழிகள் தாய்மைநற் பண்புகள்
வாழுல குயிர்க்கெலாம் இறையருள் கொடையவை!

(கெக்கெக் கென்பதில் - கோழி தன் குஞ்சுகளோடு அளவளாவக் கெக்கெக்கென்று இயல்பாய் எழுப்பும் அன்புக் குரலொலி என்பதில்;நாழிகை - கால அளவு, இருபத்து நான்கு நிமிடநேரம். ஊழிகள் - பிரளய காலங்கள், யுகாந்திரங்கள்; ஏழிசை - ஏழு இசையில் அமைந்த தாலாட்டுப் பாடல்)

**12 கூட்டமாகத் திரண்டு எழுந்த பருத்த ஈக்கள் மனிதர்களோடு வாழும் வீட்டுப் பூனைகளையும் கோவில் யானைகளையும் வதைத்தன. ஈக்களை விரட்ட முயன்ற யானைப் பாகனோ, அவனையும் ஈக்கள் தாக்கவே அவனோ நிலை குலைந்து போனான்.**

பூனைகள் மருண்டு வெருண்டு ஓடின
புதுப்புது ஈக்கள் கண்ணிலும் காதிலும்
தேனையே சுவைக்கும் ஈர்ப்பினில் திரளாய்த்
திகைப்புற அவைகளின் உடலெலாம் மொய்த்ததால்;
ஆனையின் குறுங்கண் முற்றிலும் ஈக்கள்
அடர்ந்து மொய்த்து அகலா திருக்கவே
யானையின் பாகனோ விரைந்தவை விரட்டினான்,
நடுங்கிட அவனையும் ஈக்களோ கடித்தன!

(குறுங்கண் - பெரிய உடல் கொண்ட யானையின் கண்ணோ மிகவும் சிறியது; அடர்ந்து - மிகுந்து மிகவும் நெருக்கமாய் இருந்து)

**13 உலகில் உள்ள ஈக்களின் இனங்கள் எண்ணிலவாகும். அவைகள் இல்லாத நிலப்பகுதிகளோ இல்லை என்றே சொல்லலாம். சோலைகளில் மொய்க்கும் ஈக்களையும் வண்டுகளையும் நட்புக்குரியனவாகக் கொண்டு உலவும் காதலர்களையும் எகிப்து நாட்டில் அவைகள் சூழ்ந்து மொய்த்துத் துன்புறுத்தின.**

ஈக்களின் இனங்களை எண்ணிடில் மண்ணில்
இருப்பவை ஆயிரக் கணக்கின வாகும்;
பூக்களில் மொய்க்கும் ஈக்களைப் பார்த்துப்
பொல்லாங் கெதுவும் செய்திடா வென்றே
காக்களில் உலவும் காதலர் கனிவுடன்
காதல் செய்திகள் காதில் சொலுமென
நாக்கினில் ஊறிடும் சுவைநீர் மாந்தி
நயந்துஈ வண்டு நோக்கையில் தாக்கின!

(திருக்குறள் 1121:
பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயிறு ஊறிய நீர்.

**14 பலவாக உள்ள ஈ இனங்களுள் சில இனங்கள் மனிதர்களுக்கு நன்மை விளைவிக்கும் செயல்களையும் செய்கின்றன. குறிப்பாகத் தொற்று நோய்களைப் பரப்பும் புழு, பூச்சிகளை ஈக்கள் பிடித்துத் தின்று அழிகின்றன; அவையும் அவ்வாறு செய்யாது திரிகின்றன.**

மற்றும் சிற்சில ஈயின் இனங்கள்
மனிதர் தமக்கு நோய்கள் பரப்பிடும்
தொற்றும் நோய்க்குக் காரண மாகித்
துன்பம் விளைக்கும் புழுக்கள் பூச்சிகள்
பற்றிப் பிடித்துத் தின்று அழிப்பதால்,
பார்க்கிறோம் நன்மை மனிதர்க் களிப்பதை;
முற்றவ் வீக்களும்(ஈக்களும்) இறைவன் ஆணையால்
முன்போல் செயல்செய விலைஅந் நாட்டிலே.

(விளைக்கும் - விளைவிக்கும்; முற்றவ்வீக்களும் - முற்றிலும் அந்த ஈக்கள் அனைத்தும்)

---

59

## இளம் உள்ளங்களுக்கு

# உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்க

*– B.மேரி ராபர்ட் சாந்திதாஸ், புதுவை–1.*



**கண்காணிப்பு:** புகைவண்டி ஓர் ஊரின் வழியே செல்லும் இருப்புப் பாதைக்கு குறுக்காக வாகனங்கள் செல்லும் சாலை அமைவதுண்டு. அதற்கு இருப்புப் பாதை கடவு (level crossing) என்று பெயர். இத்தகைய ஆபத்தான சந்திப்பில் வாகனங்களுக்கு எச்சரிக்கை செய்வதற்காக காவல் பணியாளர் அமர்த்தப்பட்டிருப்பார். அவர் பகலில் கொடி அசைத்தும், இரவில் லாந்தர் விளக்கை அசைத்தும் சைகை காட்டி போக்குவரத்துக்கு உதவுவார்.

**சந்திப்பில் நிகழ்ந்த விபத்து:** ஓர் நாள் இரவு அந்த இருப்புப் பாதை கடவின் வழியாக புகைவண்டி வருவதை கவனியாமல் ஓர் குதிரை வண்டி வந்து விபத்து ஏற்பட்டுவிட்டது. இந்த வழக்கு விசாரணை, நீதிமன்றத்திற்கு வந்தபோது அந்த இருப்புப் பாதை கடவுகாவல்காரர் குறுக்கு விசாரணைக்காக நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டார்.

**விசாரணை:** விசாரணை கூண்டில் நிறுத்தப்பட்ட காவல்காரரிடம் வழக்கறிஞர் குறுக்கு விசாரணையை ஆரம்பித்தார்.

**வழக்கறிஞர்:** சம்பவம் நடந்த இரவில் காவல் பணியில் இருந்தீரா?

**காவல்காரர்:** ஆம், இருந்தேன்.

**வழக்கறிஞர்:** கையில் லாந்தர் விளக்கு வைத்திருந்தீரா?

**காவல்காரர்:** ஆமாம், வைத்திருந்தேன்.

**வழக்கறிஞர்:** வண்டி வரும்போது லாந்தர் விளக்கை கொண்டு சைகை செய்தீரா?

**காவல்காரர்:** ஆமாம், சைகை செய்தேன்.

வழக்கறிஞர் குறுக்கு விசாரணையை முடித்து கொண்டார். தீர்ப்பு காவல்காரருக்கு சாதகமாகவே வந்தது.

**உண்மை:** நீதிமன்றத்திற்கு வெளியே அந்த காவல்காரன் வந்தான். அவனிடம் அவன் மனைவி வந்தாள். அவள் காதில் மட்டும் கேட்குமாறு அவன் சொன்னான்: "நல்ல வேளை. அந்த வழக்கறிஞர் என் கையிலிருந்த லாந்தர் விளக்கு எரிந்து கொண்டிருந்ததா என்று கேட்கவில்லை!

**ஒளியும் உண்மையும்:** வாழ்விலே அந்த மாதிரி மக்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அவர்கள் பிறருக்கு ஒளியாக இருப்பதில்லை. 'ஒளி' என்பது 'உண்மைக்கும்', 'நேரிய வழிக்கும்' உவமையாக விவிலியத்தில் கூறப்பட்டுள்ளது. கடவுளுக்கு முன்பாக உனக்கு உண்மை உரைக்கப்பட்ட பின்னர், அதை சொல்லிலும், செயலிலும் பிறருக்கு வெளிப்படுத்த வேண்டியது உன் கடமை. கிறிஸ்துவின் கட்டளை மிகத் தெளிவாக உள்ளது: "உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்க! அப்பொழுது அவர்கள் உங்கள் நற்செயல்களைக் கண்டு உங்கள் விண்ணகத் தந்தையைப் போற்றிப் புகழ்வார்கள்" (மத்.5:16) ●



## பாத்திமா அன்னையின் ரகசியம் உண்மையானது

சிந்தனைச் செல்வர், பேராசிரியர் அ.குழந்தைராஜ்-காரைக்குடி

**100 ஆண்டுகளுக்கு முன்பாக நடந்தது என்ன?**

**1)** 1917 ஆம் ஆண்டில் போர்ச்சுகல் நாட்டில் பாத்திமா நகரில் மூன்று சிறுவர் சிறுமியருக்கு அன்னை காட்சி அளித்ததன் நூற்றாண்டு விழாவை நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். காட்சி கண்ட மூவரும் புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளனர். அன்னை மரியா கூறிய ஒரு சில விவரங்களை லூசியா ஜெசிந்தா குறிப்பெடுத்து அதை அப்போதைய திருத்தந்தையிடம் கொடுத்து ஆண்டுகள் கழித்து அதை திறந்து பார்க்க வேண்டும் எனக்கூறி ஒப்படைத்தார்கள். இந்த ரகசியத்தை திருத்தந்தை வெளியிட வேண்டும் என பலர் வலியுறுத்தினர். ஆனால் திருத்தந்தை காலம் தாழ்த்தினார். ஆவல் மேலும் பெருகியது கடைசியில் திறந்து பார்த்தபோது அதில் "ரஷ்யா மனம் திருந்த வேண்டும்" என எழுதியிருந்தது. ரஷ்யாவிற்காக நாம் ஜெபமாலை சொல்ல வேண்டும் எனவும் இருந்ததாக சொல்லப்பட்டது. அன்னை கூறியபடி ரஷ்யா உடைத்து அங்குள்ள கம்யூனிசம் ஒழிந்து அந்த நாடு நாடுகளாகச் சிதறிப்போயிற்று.

**2) முதல் உலகப் போர் தொடங்கி (1914–19)** ஆண்டில் ரஷ்ய புரட்சி நடந்தது சார் (Czar) மன்னர்களின் ஆட்சியை ஒழித்துவிட்டு மக்களாட்சியை நிறுவினார் விளாடிமிர் லெனின். முதல் உலகப் போரில் ரஷ்யாவின் கவனம் தனது நேச நாடுகளான அமெரிக்கா இங்கிலாந்து பிரான்ஸ் இவர்களோடு சேர்ந்து அச்சு நாடுகளாகிய ஜெர்மனி இத்தாலி ஜப்பான் போன்ற நாடுகளோடு மோதிக்கொண்டன.

**3) ஆண்டில்தான் பொதுநிலையினர் பணிக்குழு....** கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு, பெண்கள் பணிக்குழு என்ற அமைப்புக்கள் உருவாயின. இரண்டாம் வத்திக்கான் சங்கம் பொது நிலையினரே திருச்சபை என்று சொல்லும் அளவுக்கு பொது நிலையினரை உயர்த்தியது. அர்ச்சிக்கும் பணி ஆளும் பணி மற்றும் போதிக்கும் பணி என்ற முப்பெரும் பணிகளை உருவாக்கியது.

**4) ஜூன், 17,2017 பிரான்ஸ் நாட்டில் அவிஞ்ஞோனில்** (Avignon) திருத்தந்தையர் தங்கியிருந்ததன் 700 ம் ஆண்டு நிறைவு நிகழ்வில் கலந்துகொள்வதற்கு, திருத்தந்தை பிரான்சிஸ் வாழ்த்து தெரிவித்துள்ளார். அவிஞ்ஞோனில் 1305 ம் ஆண்டு முதல், ஏழு திருத்தந்தையரும், இரண்டு எதிர்த் திருத்தந்தை யரும் தங்கியிருந்தனர். திருஅவையில் பெரும் மேற்கத்திய பிரிவினை ஏற்பட்ட 39 ஆண்டு காலத்தில் (1378-1417), ஒரு திருத்தந்தை உரோமையிலும், மற்றொருவர் அவிஞ்ஞோனி லும் இருந்து ஆட்சி செய்தனர். புனித சியன்னா கத்ரின், திருத்தந்தையரை உரோமைக்கு அழைத்து வந்தார். திருத்தந்தை 11ம் கிரகரி, 1376ம் ஆண்டு செப்டம்பர் 13ம் தேதி அவிஞ்ஞோனைக் கைவிட்டார். அவர், 1377ம் ஆண்டு சனவரி 17ம் நாளன்று, உரோமைக்கு வந்தார். இத்தோடு, திருத்தந்தையர் அவிஞ்ஞோனில் தங்கியிருந்தது அதிகாரப்பூர் வமாக முடிவுக்கு வந்தது. ஆயினும், அதற்கு அடுத்த ஆண்டில் திருத்தந்தை 11ம் கிரகரி இறந்தார். இதற்குப் பின் பிரச்சனைகள் மீண்டும் தொடங்கின. எதிர்த் திருத்தந்தையர் அவிஞ்ஞோனில் இருந்தனர். ஆயினும் 1417ம் ஆண்டில், கான்ஸ்டன்ஸ் சங்கத்தில் மேற்கத்திய பிரிவினைப் பிரச்சனை முடிவுக்கு வந்தது.

இந்த நான்கு காரியங்களும் பாத்திமா அன்னையின் நூற்றாண்டு விழா சமயத்தில் நிகழ்வது கடவுளின் விருப்பமும் திட்டமும் ஆகும். ●

## இராயகிரித் தமிழ்ச்சங்கத்தார் பேராசிரியர் பா.வளன் அரசு அவர்களுக்குச் செம்மொழிச் செம்மல் விருது வழங்கிப் பாராட்டினர்.

உலகத் திருக்குறள் தகவல் மையத் தலைவரும் தூய யோவான் கல்லூரி முன்னாள் தமிழ்த் துறைத் தலைவருமான பேராசிரியர் பா. வளன் அரசு அவர்களுக்கு இராயகிரித் தமிழ்ச் சங்கம் "**செம்மொழிச் செம்மல்**" என்னும் விருது வழங்கிப் பாராட்டியது.

இராயகிரித் தமிழ்ச் சங்கத்தின் இரண்டாவது ஆண்டுவிழா சங்கத் தலைவர் சீர்மிகு சோ. அருணாசலம் அவர்கள் தலைமையில் நடை பெற்றது. செயலாளர் சி.கணேசன் வரவேற்றுப் போற்றினார். தலைவர் சோ.அருணாசலம் சிறப்பு விருந்தினரைப் பாராட்டிப் போற்றினார். பேராசிரி யர் பா. வளன் அரசு அவர்களின் திருக்குறள் பணிகளைப் பாராட்டி, அவர்களுக்கு செம் மொழிச் செம்மல் விருது வழங்கினார். பாவாணர் கோட்ட அமைப்பாளர் புலவர் ஆ. நெடுஞ் சேரலாதன் தகவுரை ஆற்றினார். பேராசிரியர் பா. வளன் அரசு "வழிகாட்டும் ஒளி விளக்கு" என்னும் தலைப்பில் திருக்குறள் பற்றிச் சிறப்புரை நிகழ்த்தினர். இராசபாளையம் மாணவ மணிகளின் நாட்டிய நிகழ்ச்சி நடந்தது. தேர்வில் வெற்றி வாகை சூடியோருக்குச் சான்றிதழ்கள் தரப்பட்டன. துணைச் செயலாளர் மாரியப்பன் நன்றி கூற, நாட்டுப் பண்ணுடன் நிகழ்ச்சி நிறைவுற்றது.




EUROPE PILGRIMAGE TOUR (14N/15D)

VATICAN – ROME –ASSISI –PISA – VENICE – PADUA- TURIN-
LUCERN, ENGELBERG, Mt. TITLES, ZURICH – PARIS – LOURDES

Inclusions:
Emirates Flight from Chennai * 3* & 4* Hotel stay * Travel Insurance upto 69Years * Full Board Meals
*A/c ~~Coach~~ Transfers * Daily Mass *English speaking guide & Tour Manager Assistance * And more

Travel Period: 18th September – 2nd October 2017

Package Cost: Rs.1,79,000/Person

For Booking and Details. Please Contact:

SANGAMAM LEISURE MANAGEMENT PVT LTD.,
(Formerly Known as GREATWAY TOURISM PRIVATE LIMITED)
No.56, 1st Floor, Mission Street, Pondicherry - 605 001.
SANGAMAM LEISURE Ph: 0413-4202322, Cell : 95970 82240, 98941 02518
www.sangamamleisure.com, E-mail: sangamam.sales@gmail.com



# இயேசுவின் இரத்தம்

- திரு. P. சாமுவேல் பெலிக்ஸ், புதுவை - 5.

உயிர் இரத்தத்தில் இருக்கிறது என்பது வேதாகம உண்மை. இரத்தம் மனித இனம் உருவாக காரணமாயிருக்கிறது. இரத்தத்தில் உயிர் இருப்பதால் இரத்தம் மருத்துவமனைகளிலும், தனியார் சேவை மனப்பான்மையுடன் நடத்தி வருகின்ற இரத்த தான சேமிப்பு வங்கியிலும் சேமித்து பாதுகாக்கப்பட்டு, அவ்வப்பொழுது ஏற்படும் விபத்துகளாலும் மருத்துவமனைகளில் நடத்தப்படும் அறுவை சிகிச்சைகளுக்கும் சேமிக்கப்பட்ட இரத்தம் மனித உயிரைக் காக்கும் மாமருந்தாக பயன்படுவது நாம் எல்லாரும் தெரிந்து தெளிந்த உண்மையாகும். இவ்வாறு ஒவ்வொருநொடிப் பொழுதும் இம்மானிட உலகில் இரத்தம் நம்முடைய வாழ்வில் மிகவும் இன்றியமையாததாக பயன்படுகின்றது என்பதை நாம் உணர்ந்திருக்கின்றோம்.

ஆனால் எவ்வாறு இம் மானிட உலகிற்கு உயிர் வாழ்வதற்கு இரத்தம் அவசியமோ அவ்வாறு நாம் வாழ்கின்ற வாழ்வு இம்மண்ணுலகத்திலேயே முடிவடைவதில்லை. மாறாக, நாம் ஒவ்வொருவரும் விண்ணகத்திற்கு போய் சேர வேண்டியவர்கள் என்பதால், நாம் ஒவ்வொருவரும் விண்ணகத்திற்கு சென்றடைய நம் இறைதந்தை நம் ஒவ்வொருவர் வாழ்விலும் அக்கறை மிகுதியாகக் கொண்டவராய், தம் ஒரே மகனையே இவ்வுலகிற்கு அனுப்புமளவிற்கு இவ்வுலகின் மீது அன்பு கூர்ந்தவராய், தம் ஏக மைந்தனை நம் ஒவ்வொருவர்க்காகவும் இவ்வுலகில் மானிடராய் பிறக்க வைத்து நம் அனைவரின் மீட்புக்காகவும் அன்பர் இயேசு இரத்தத்தை இவ்வுலகிற்காக சிந்த வைத்து அவரது உயிரை நமக்காக துறக்க வைத்து அவரது உன்னதமான மீட்பு என்னும் மாபெரும் கொடையை தர சித்தமானார்.

எவ்வாறு நம் அன்பர் இயேசு நமக்காகவும் நம் மீட்புக்காகவும் இரத்தம் சிந்தி நம் அனைவர்க்கும் மீட்பை அருளினாரோ அதேபோல அவரது உடலையும் இரத்தத்தையும் உட்கொள்ளும் பொழுது நாம் அனைவரும் இயேசு கிறிஸ்துவில் ஒன்றிணையப் பட்டு ஒரே உடலாகவும் இரத்தமாகவும் அந்த வியப்பிற்குரிய அருட்சாதனத்தில் ஒருங்கிணைக்கப்படுகிறோம் என்பதில் நாம் ஒவ்வொருவரும் மட்டற்ற மகிழ்ச்சியும் பரவசமும் அடைகிறோம் அல்லவா?

### வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு

❊ சர்வவியாபி இதழில் விளம்பரம் கொடுக்க விரும்புவோர் குறைந்தது பத்து நாட்களுக்கு முன் பதிவு செய்து கொள்ள வேண்டுகிறோம்.

❊ 2016-2017 சர்வவியாபி சந்தாவை புதுப்பித்துக் கொள்ளவும். **- ஆசிரியர், சர்வவியாபி.**



**திரு. V. இருதயராஜ்**
B.Sc.,M.A., Lab.Tech (Rtd)

**தோற்றம்: 19-01-1944**
**மறைவு : 11-07-2014**

### விண்ணக வாழ்வின் 3-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

**ஆண்டுகள் மூன்று கடந்த போதும்**
**அகலாது நினைவுகள் நெஞ்சில் மோதும்**
**ஆண்டவர் இயேசுவின் அரசாட்சியில் – நிதம்**
**அமைதியில் வாழ்ந்திட அர்ப்பணித்தோம் (எம்) செபம்!**

**நினைவுத் திருப்பலி:**
11.7.2017 காலை 6.00 மணிக்கு புதுவை, திரு இருதய ஆண்டவர் பசிலிக்காவிலும், ரெட்டியார்பாளையம், புனித அந்திரேயா ஆலயத்திலும், மாலை 6.00 மணிக்கு, புனித பிரான்சிஸ்கு சவேரியார் ஆலயத்திலும் திருப்பலிகள் நிறைவேற்றப்படும்.

**இவரது பிரிவால் துயருறும்**
**மனைவி: திருமதி. D. மரிய தெரேசா Rtd.H.M.**
**குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள்.**

### விண்ணக வாழ்வின் 21-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

**தோற்றம்: 30-06-1934**



**மறைவு: 14-07-1996**

**REV.FR. K. AUGUSTIN**

**குருப்பட்டம்: 20-04-1965**

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" யோவான்.11:25

**இறைவா! இவ்வுலகிலிருந்து உம்மால் அழைக்கப்பட்ட அருள்திரு. K. அகஸ்டின் அடிகளாரின் ஆன்மாவை நித்திய வாழ்வில் சேர்த்து முடிவில்லா ஒளியில் என்றும் உம்மோடு இருக்கும்படி செய்தருளும்.**

பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்.**
**புதுவை.**

### விண்ணக வாழ்வின் ஐந்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி

**தோற்றம்: 11-10-1927**



**மறைவு: 10-07-2012**

**ம.கித்தேரி அம்மாள்**

"அநாதி தேவனே, நீர் என் அடைக்கலம் உம்முடைய நித்திய புயமே எனக்கு ஆதாரம்"- உபா.33:29

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 10-7-2017 அன்று காலை 6.00 மணிக்கு புதுவை நெல்லித்தோப்பு, புனித விண்ணேற்பு அன்னை ஆலயத்தில் மரித்தோர் திருப்பலி நிறைவேற்றப்படும்.

பிரிவால் துயருறும்
**மகள்கள், மருமகன்,**
**பேரப்பிள்ளைகள், பேத்திகள்,**
**கொள்ளுபேரன்கள்,**
**கொள்ளுப்பேத்திகள்.**
நெல்லித்தோப்பு.

### விண்ணக வாழ்வின் 30-ஆம் நாள் நினைவு அஞ்சலி

**தோற்றம்: 17-07-1966**



**மறைவு: 10-06-2017**

**S. பேட்ரிக் ராஜன்**

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" யோவான்.11:25

**இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 9-7-2017 ஞாயிறு காலை 7.30 மணிக்கு புதுவை, திரு இருதய ஆண்டவர் பசிலிக்காவிலும், காலை 7.30 மணிக்கு காரைக்கால் புனித தேற்றரவு அன்னை ஆலயத்திலும் திருப்பலி நிறைவேற்றப்படும்.**

பிரிவால் துயருறும்
**தாய்: எவான்ஜலின் ராஜன்**
**மனைவி: லிதியா ராஜன்**
**குடும்பத்தார், உறவினர்கள், மற்றும் நண்பர்கள்.**



# விண்ணக வாழ்வின் 10-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

“உயிரோடு இருக்கும்போது என்னிடம் நம்பிக்கை கொள்ளும் எவரும் என்றுமே சாக மாட்டார்” (யோவான்.11:26)

**ஜெபம்**

அன்பின் இறைவா! இம் மண்ணில், இவர்கள் உடல் மறைந்தாலும் எங்கள் மனக்கண்முன், என்றும் மாறாதிருக்கும் எங்கள் மீது அன்பும், பாசமும் நிறைந்து எங்களைவிட்டு விண்ணக வாழ்விற்குச் சென்ற

**திரு. ழில்பேர் முத்தப்பா**

அவர்களின் ஆத்மத்திற்கு நித்திய இளைப்பாற்றியையும், முடிவில்லாத பிரகாசமும் நித்திய சமாதானமும் அவருக்கு உண்டாக செய்தருளும். –ஒரு கர்.மங்.திரி.

பிரிவால் துயருறும்
மனைவி: **அலின் முத்தப்பா**
**மக்கள், மருமக்கள், மற்றும் பேரப்பிள்ளைகள்.**
புதுவை–1.

## திரு. ழில்பேர் முத்தப்பா

பிறப்பு 19-07-1936 இறப்பு 09-07-2007

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக புனித ஜென்ம ராக்கினி அன்னை பேராலயத்தில் 09–07–2017 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.15 மணிக்கும், திரு இருதய ஆண்டவர் பசிலிக்காவில், மாலை 6.00 மணிக்கும் திருப்பலி நிறைவேற்றப்படும்.

---

# விண்ணக வாழ்வின் 16-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" (யோவான்.11:25)

**இறைவா! இவ்வுலகிலிருந்து உம்மால் அழைக்கப்பட்ட உம் அடியாள் திருமதி. ஜூகுந்தா டெய்சி ஆன்மாவை நித்திய வாழ்வில் சேர்த்து முடிவில்லா ஒளியில் என்றும் உம்மோடு இருக்கும்படி செய்தருளும்.**

## திருமதி. ஜூகுந்தா டெய்சி அமலோற்பவநாதன், B.A.,B.Ed

பிறப்பு : 04-09-1976
இறப்பு : 14-07-2001

பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்.**
புதுவை

---

# விண்ணக வாழ்வின் 10-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 18-05-1976



மறைவு: 15-07-2007

## Rev.Fr. ஜோசப் ஜான்பீட்டர்

குருப்பட்டம் : 03-05-2005

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 15-7-2017 காலை 6.15 மணிக்கு இவர் பிறந்த ஊராகிய மைக்கேல்புரத்திலும், 16-7-2017 புதுவை ஜென்ம ராக்கினி மாதா பேராலயத்திலும், அவர் பணி யாற்றிய பணித் தலங்களிலும் திருப்பலி நிறைவேற்றப்படும். இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்க அழைக்கிறோம்.

இவரது பிரிவால் துயருறும்
பெற்றோர்: **அகஸ்டின்** ஆசிரியர்
**தார்சியுஸ் மரி**
**உடன் பிறந்தோர் மற்றும் உறவினர்கள்.**
மைக்கேல்புரம்.

# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



**பிறப்பு**
**06-01-1965**

**இறப்பு**
**10-07-2016**

# திரு. S. அந்தோணிசாமி

**(Electricity Department)**

“என் ஜீவியத்தில் என்னை நேசித்தவர்களே, மரணத்திலும் என்னை மறவாதீர்கள்.”

**ஜெபம்**

நித்திய ஒளியின் தூய்மையாகிய இயேசுவே! ஆத்துமங்களை இரட்சிக்கிறவரே! உமது அன்பில் மூழ்கி இளைப்பாறுவதற்காக இப்பூவுலகினின்று உம்மால் அழைத்துக் கொள்ளப்பட்ட உம் அடியார்

# திரு. S. அந்தோணிசாமி

அவர்களின் ஆன்மா என்றென்றும் விண்ணகப் பேரின்பத்தில் சகல புனிதர்களின் கூட்டத்தில் முடிவில்லா வாழ்வில் சேர்ந்து மகிழ உம்மை மன்றாடுகிறோம். ஆமென் - கர்.மங்.திரி.

**திரு. S. அந்தோணிசாமி** அவர்களின் ஆத்தும இளைப்பாற்றிக்காக புதுவை உப்பளம், தூய சவேரியார் ஆலயத்தில் 09-07-2017 காலை 7.30 மணிக்கும், 10-07-2017 காலை 6.00 மணிக்கும், திரு இருதய ஆண்டவர் பசிலிக்காவில் 10-07-2017 மதியம் 12.00 மணிக்கும், நெல்லித்தோப்பு புனித விண்ணேற்பு அன்னை ஆலயத்தில் 10-07-2017 காலை 6.00 மணிக்கும் நிறைவேற்றப்படும் திவ்ய பலிபூசையில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக ஜெபிக்க வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்
**மனைவி, பிள்ளைகள்,**
**உடன் பிறந்தோர், மற்றும் உறவினர்கள்.**
வாணரப்பேட், புதுவை.

நித்திய இளைப்பாற்றியை இவருக்கு அளித்தருளும் ஆண்டவரே, முடிவில்லா ஒளி இவர்கள்மேல் ஒளிர்வதாக.

# 100வது பிறந்த நாள் வாழ்த்துக்கள்
## 11–07–2017







**பிறப்பு**
**11-07-1917**

**இறப்பு**
**15-03-2005**

# திரு. அதியசயநாத தாவீது

“சீரியதொரு பந்தயத்தில் ஓடினேன் ஓட்டத்தை முடித்துவிட்டேன்;
விசுவாசத்தை பாதுகாத்தேன்.” (2திமோத்.4:7-8)

**அப்பா!**
கண்ணக்கெட்டாத தொலைவில் - நீவிர்
நீங்காதஉம் நினைவில் - நாங்கள்.
நினைவில் நிறைந்த - நீவிர்
நினைவாகவே ஆகிவிட்டீர்.
குடும்பத்தில் தலை சிறந்த தந்தையானீர்
ஈன்றெடுத்தமக்களை உயர்த்தினீர்
ஆசானுக்கெல்லாம்நல் ஆசானாக போற்றப்பட்டீர்.
இல்லத்தையே கல்விக்கூடமாக்கி எண்ணற்ற சிறுவர்களுக்கு
ஞானத்தைஅளித்து அவர்களுடைய
நல் வாழ்வுக்கு வழி காட்டினீர்.
உற்றார் உறவினரை வளம் பெற செய்தீர்.
உழைப்பால், பண்பால், தியாகத்தால் உயர்ந்தீர்.
தோட்டக்கலையும் உங்களுக்கு கை வந்த கலையே!
உங்கள் திறமையிலும் உழைப்பிலும்
இல்லத்தில் மலர்கள் பூத்து குலுங்குகின்றன இன்றும்!
உங்களது எளிமையும் தாழ்ச்சியும் உங்களை உயர்த்தியது.
எமக்கு விசுவாசத்தையும், அன்பையும்,
தருமத்தையும் விட்டு சென்றீர்.
ஆண்டவரின் கரத்தில் அழகிய மணி முடியாய்,
அலங்காரமாய் சுடர்விட சென்றீர்.
இறைவனுக்காய் எரிந்த விசுவாச விளக்கே!
எமக்காய் வாழ்ந்த - வாழும் அணையா விளங்கே!
மண்ணுலகில் நீவிர் புகழோடு வாழ்ந்தது போல்
விண்ணுலகிலும் நீவிர் இறைவனின் அருளில்
இணைந்து வாழ வாழ்த்துகின்றோம்
எங்கள் அன்பு நிறைந்த பிறந்த நாள் வாழ்த்துக்களையும்-நீவீர்
இறைவனில் நிரந்தர அமைதி பெற, ஜெபங்களையும்,
இன்றைய திருப்பலிகளையும் உமக்கு அர்ப்பணிக்கின்றோம்.

**என்றும் உம் நினைவில் வாழும்,**
**பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,**
**மற்றும் குடும்பத்தினர்.**
புதுவை–1.

✦ **ஈராக்கின் குர்திஸ்தானில் புதிய கத்தோலிக்க கோவில்:** ஈராக்கின் குர்திஸ்தானின் எர்பில் புறநகர்ப் பகுதியில் கல்தேய வழிபாட்டுமுறை முதுபெரும் தந்தை லூயிஸ் இரஃபேல் சாக்கோ அவர்களால், புனிதர்கள் பேதுரு மற்றும் பவுல் பெயரிலான கோவில் ஒன்று அர்ச்சிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது. ஈராக் நாடு பல்வேறு துன்ப நிலைகளை எதிர்கொண்டு வந்தாலும், அந்நாட்டை விட்டு வெளியேறு வதற்கான சோதனைகளைக் கைவிட்டு, அந்நாட்டின் கல்தேய பாரம்பரியம் காக்கப்பட ஒவ்வொரு கிறிஸ்தவரும் உதவ வேண்டும் என இக்கோவில் அர்ச்சிப்புத் திருப்பலியில் மறையுரையாற்றினார் முதுபெரும் தந்தை சாக்கோ.

✦ **சீர்திருத்த சபைகளின் அவையும் கிறிஸ்தவ ஒன்றிப்பு முயற்சிகளும்:** யார் மீட்படையக்கூடும் என்பதைக் கூறும் ஏற்புடைமை கொள்கையில், கத்தோலிக்கர். லூத்தரன் மற்றும் மெத்தடிஸ்ட் அவைகளிடையே இதுவரை நிலவிவந்த கருத்து ஒருங்கிணைப்பில் உலக சீர்திருத்த சபைகளின் அவையும் இப்புதனன்று இணையவிருப்பதாக அறிவிக்கப் பட்டுள்ளது. இந்த இணைப்பு, கிறிஸ்தவ முழு ஒன்றிப்பை நோக்கியப் பாதையில் ஒரு முக்கிய மைல் கல்லாக, கருதப்படும் என்று கூறப்படுகிறது. 1517ம் ஆண்டு மார்ட்டின் லூத்தர், பாவ மன்னிப்பு முறைகளுக்கு எதிராக தன் குரலை எழுப்பிய ஜெர்மனியின் விட்டன்பர்க்கில் ஜூலை 5 இப்புதனன்று இடம்பெற உள்ள கூட்டத்தில், உலக கிறிஸ்தவ சீர்திருத்த சபைகளின் அவை, ஒன்றிப்பை நோக்கிய தன் இசைவைத் தர முன்வந்துள்ளது.

✦ **இந்தியாவில் சமய சகிப்பற்ற தன்மைக்கு எதிராக அமைதிப் போராட்டம்:** இந்தியாவில் பரவலாக இடம்பெற்று வரும் சமய சகிப்பற்றதன்மைக்கு எதிர்ப்பையும், வன்முறைக்குப் பலியானவர்களுடன் ஒருமைப்பாட்டுணர் வையும் தெரிவித்து, ஆயிரக்கணக்கான மக்கள், புது டில்லியில் அமைதிப் போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர். 'எனது பெயரால் அல்ல' என்ற தலைப்பில், ஜூன் 28, இப்புதனன்று, இந்தியாவில் பல பகுதிகளை சேர்ந்த திருஅவை குழுக்கள் உட்பட, பல்வேறு குழுக்களால், இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டது. இந்தியா விலுள்ள ஒரு சிறு குழுவினர் கட்டளையிடும், ஒரு குறிப்பிட்ட கலாச்சாரத்தையும், வாழ்வுமுறையையும், அனைத்து மக்களும் பின்பற்ற வேண்டுமென, வலியுறுத் துவதை ஏற்க முடியாது என, ஒன்றிணைந்த கிறிஸ்தவக் கழகத் தலைவர், மிக்கேல் வில்லியம்ஸ் அவர்கள், UCA செய்தியிடம் கூறினார். விளம்பர அட்டைகள், தேசியக் கொடிகள் போன்றவற்றை ஏந்தியவண்ணம், மாணவர்கள், கலைஞர்கள், அறசியல் வாதிகள், சமயத் தலைவர்கள் என, ஆயிரக்கணக்கானோர், இந்த அமைதிப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

✦ **ஜி.எஸ்.டியால் விலை உயரும் உயிர்காக்கும் மருந்துகள்:** இந்தியாவில், ஜூன் 30, இவ்வெள்ளி நள்ளிர விலிருந்து அமலபடுத்தப்பட்டுள்ள ஜி.எஸ்.டி வரிமுறையால், எதிர்காலத்தில் மருந்துகளின் விலை உயரும் என ஊடகங்கள் எச்சரித்துள்ளன. இந்தியாவின் மிகப்பெரிய வரிச் சீர்திருத்தம் என அழைக்கப்படும், புதிய சரக்கு மற்றும் சேவை வரியானது, நாடு முழுவதும் ஒரே விதமான வரி விதிப்பை கொண்டிருக்கும் எனக்கூறப்பட்டுள்ள வேளை, இந்தப் புதிய ஜி.எஸ்.டியால், மருந்துகளின் விலை ஏறக்குறைய 2.3 விழுக்காடு அளவுக்கு அதிகரிக்கும் என்று, இந்திய மருந்து உற்பத்தியாளர் கூட்டமைப்பின் (ஐ.டி.எம்.ஏ.) தலைவர் தாரா படேல் அவர்கள் கூறியிருக்கிறார். ஐ.டி.எம்.ஏ செய்திருக்கும் முடிவின்படி, அரசின் கட்டுப்பாட்டிற்கு வெளியே இருக்கும் மருந்து தயாரிக்கும் நிறுவனங்களும் அதற்கு ஒப்புதல் வழங்கிவிட்டன எனவும் சொல்லப்பட்டுள்ளது. - பிபிசி.

✦ **கடவுள் நம் எல்லாரிடமும் ஒப்படைத்துள்ளஅன்பின் கடமை:** பிரித்தானியாவின் இலண்டன் Great Ormond Street சிறார் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுவந்த, அபூர்வ நோயால் துன்புறும், Charlie Gard என்ற பத்து மாத ஆண் குழந்தை யின் வாழ்வை நீடிக்கும் கருவிகளை அகற்றி விடுவதற்கு, நீதிமன்றம் தீர்மானித்துள்ள வேளை, மனித வாழ்வைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை தனது டுவிட்டரில் எழுதியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். இக் குழந்தையின் பெற்றோரான Chris Gard,Connie Yates ஆகிய இருவரும், தங்களின் மகனுக்குச் சிகிச்சையளிக்க அமெரிக்க ஐக்கிய நாடு செல்ல விரும்பியும், நீதிமன்றம் இவ்வாறு உத்தரவிட்டுள்ளது. அதோடு, ஜூன் 30, இவ்வெள்ளியன்று, உயிர்காக்கும் கருவிகள் அகற்றப்படவிருந்த நிலையில், பெற்றோர் தங்கள் மகனுடன், சற்று அதிக நேரம் செலவழிப்பதற்கு நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது என ஊடகச் செய்திகள் கூறுகின்றன. பிறப்பிலேயே அபூர்வ நோயால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தை சார்லி, தன் தோள்களையும், கால்களையும் அசைக்க முடியா மலும், தானாக மூச்சு விடவோ அல்லது உணவு உண்ணவோ முடியாமலும் உள்ளான் எனச் சொல்லப்படுகின்றது. -Agencies



✦ **புதிய தலைமைத் தேர்தல் ஆணையர்:** நாட்டின் புதிய தலைமைத் தேர்தல் ஆணையராக அச்சல்குமார் ஜோதி மத்திய அரசால் 4-7-2017 செவ்வாய் அன்று நியமிக்கப்பட்டார். தேர்தல் ஆணையத்தில் உள்ள நஜீம் ஜைதி, அச்சல்குமார் ஜோதி, ஓம் பிரகாஷ் ராவத் ஆகியோரில் நஜீம் ஜைதி தலைமைத் தேர்தல் ஆணையர் பதவியிலிருந்து 5-7-2017 அன்று ஓய்வு பெறுகிறார். இதையடுத்து அச்சல்குமார் ஜோதியின் நியமனம் இடம் பெற்றுள்ளது. இவர் நாட்டின் 21-ஆவது தலைமைத் தேர்தல் ஆணையர் ஆவார். இதற்குமுன் குஜராத் மாநில அரசுத் துறைகளில் பணியாற்றியவர். குறிப்பாக குஜராத் முதல்வராக நரேந்திரமோடி இருந்தபோது, அம்மாநிலத் தலைமைச் செயலராகப் பணி புரிந்தவர். 1953ம் ஆண்டு ஜனவரி 23 ம் நாள் பிறந்த அவருக்கு இப்போது வயது 64. - (தினமணி /TOI/ தினகரன்)

**குணமளிக்கும் நற்செய்தி ஆராதனைக் கூட்டம்**

**நாள்: 15-07-2017 (சனிக்கிழமை)**

நேரம்: காலை 9.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை

இடம்: **புனித சவேரியார் மேய்ப்புப்பணி & கலைத்தொடர்பு நிலையம்.**

(புனித பிரான்சிஸ் சேவியர் ஆலய வளாகம்) உப்பளம், பாண்டிச்சேரி-1.

**நடத்துபவர்:** அருள்தந்தை **அற்புதராஜ்**

(இயக்குனர், கானா தியான மையம், காந்திகுப்பம், தர்மபுரி)

**அழைப்பவர்:** அருள்தந்தை **பிலோ**, இயக்குநர்

மற்றும் மைய செப தயாரிப்புக் குழுவினர், புனித சவேரியார் மேய்ப்புப்பணி & கலைத்தொடர்பு நிலையம், உப்பளம், புதுவை-1.

**தொடர்புக்கு:** 9443244787 / 9750365723 / 9842333363

*Printed and Published* on behalf of Most Rev. Dr. A. ANANDARAYAR, Archbishop of Pondicherry & Cuddalore, by Rev. Fr. C.ANTONI ROCHE, Manager, MISSION PRESS & Editor, Sarva viabi, 196, Cathedral Street, Pondicherry - 605 001.